very close to the fishing harbour in connection with the inauguration of which the Hon. Minister presided over yesterday ? May I also know whether these people will be given alternative sites very close to the fishing harbour ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அவர்களுக்கு வேண்டிய இட வசதி காசிமேடு, புதுமனைக் குப்பம் பகுதியில் செய்து தரப்பட்டிருக்கிறது. எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு வசதியாக இந்தத் திட்டம் வருகின்றபோது அங்கே வாழ்கின்ற மீனவர்கள் தங்களுடைய கஷ்டங்களை வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக மீனவத் தலைவர்களை அழைத்து இயக்குநர் அவர்கள் பேசி ஒரு முடிவைக் கண்டிருக்கிறார்கள்.

உறப்பனூர் கண்மாயில் மீன் பிடிப்பு

*255 வினா : **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருமங்கலம் அருகே உள்ள உறப்பனூர் கண்மாயில் மீன் பிடிப்பதில் தகராறு ஏற்பட்டதை யொட்டி யாரும் மீன் பிடிக்க அனுமதிக்கப் படுவது நிறுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், முன்போல் பொது மக்கள் மீன் பிடித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) இந்த ஏரியில் மீன் பிடிப்பதைத் தடை செய்து எந்த ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. அந்தப் பகுதியில் அமைதி குலைவதைத் தடுக்கவும் அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைபெறச் செய்யவும் 1965, 1966, 1967 ஆண்டுகளில் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 144 வது பிரிவின் கீழ் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டு காவல் படை பாதுகாப்புக்கும் வகை செய்யப்பட்டது.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : இப்போது நாட்டிலே தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. இப்போது குளங்களில் உள்ள மீன்களைப் பிடித்துவிட்டால் தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாகிவிடாதா ? ஆகவே, வறட்சியின் காரணமாக குளங்களில் மீன் பிடிப்பது நிறுத்தி வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : குளங்களிலுள்ள அந்த மீன்களைப் பிடிக்கவில்லை யென்றால் காகங்களும், கழுகுகளும் எடுத்துச் சென்றுவிடும். இந்த உணவு நெருக்கடி சமயத்தில் மீனைப் பிடித்துச் சாப்பிட்டு ஓரளவு சமாளிக்க முடியுமென்ற காரணத்தால் கனம். உறுப்பினர் அவர்கள் மீன் பிடிப்பதை எதிர்க்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு பி. வேலுசாமி : மீன் வளத்திற்காக ஒரு டிபார்ட்மென்ட் இருக்கிறது. கோவை ஜில்லாவில் தண்ணீரே கிடையாது. தண்ணீர் இல்லாத அந்தப் பகுதியில் மீன் வளத்துறை என்ன செய்கிறது? அவர்களுக்கு ஏதாவது புதிய வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா அல்லது சும்மா இருந்துகொண்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தண்ணீர் இல்லாத போது மீனும் அங்கிருப்பதற்கு நியாயம் இல்லை. உறப்பனூர் பற்றிய கேள்வியிலே கனம் அங்கத்தினர் அவர்கள் கோயம்புத்தூருக்குப் போய்விட்டார்கள்.

தாராபுரத்தில் புதைச் சாக்கடை அமைப்புத் திட்டம்

*256 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

தாராபுரம் நகரத்தில் underground drainage system அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?